2013 அக்டோபர் 29] [திரு. கே.சி. வீரமணி]

பாதிக்கப்பட்டவர்கள், மாநிலத்தில் எந்தப் பகுதியிலிருந்தும் 044–24350496 என்ற எண்ணில் தொடர்பு கொண்டால், நோய்களுக்குச் சிகிச்சை எங்கு பெறுவது, யாரைத் தொடர்பு கொள்வது போன்ற பல்வேறு தகவல்களைத் தெரிவிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதேபோன்று, இன்றைய தினத் தந்தி நாளிதழிலே, சுகாதாரத் துறை, பள்ளிக் கல்வித் துறை இரண்டும் இணைந்து, டெங்கு நோயைப் பரப்பும் கொசுவை ஒழிக்க பள்ளி மாணவ, மாணவியரிடையே உறுதிமொழி மற்றும் Aedes கொசுவைப்பற்றிய வீடியோ அவர்களுக்குக் காண்பிக்கப்படுகிறது என்று செய்தி வெளியிடப்பட்டுள்ளது என்ற தகவலோடு, இன்றைக்கு டெங்கு நோய் பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்திட மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வெகு விரைவான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்ற கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

எனவே, டெங்கு போன்ற பிற காய்ச்சல்கள் மற்றும் காலரா போன்ற நோய்கள் குறித்து பொது மக்கள் பீதியடையத் தேவையில்லை என்பதையும், அதைக் கட்டுப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு எடுத்து வருகிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

6. அறிக்கைகள் அளித்தல்

மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா, மனுக்கள் குழுவின் தலைவர்.

திரு. ஆர். மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கத் தமிழுக்குச் சந்தனத் தொட்டில் கட்டும் தலைவியே! ஏங்கி நிற்கும் ஏழைகளைத் தாங்கி நிற்கும் எங்கள் அன்னையே! இருக்கும் தலைமுறைக்கும், பிறக்கும் தலைமுறைக்கும்

[திரு. ஆர். மனோகரன்] [2013 அக்டோபர் 29

சீரிய திட்டங்கள் தந்திடும் சிந்தனைத் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) என்றென்றும் மக்கள் மனதில் நிற்கும் எங்கள் மகத்துவமே, அன்புத் தாயே, அம்மா அவர்களே, உருவான நாள் முதலாய் உருக்குலையா மனம் கொண்டு உயர்வான களம் காணும் உன்னதத்தின் உயிர் மூச்சே, துயர் நீக்கும் நம் அரசின் தூய்மை மிகு மணிமுடியே, நாளை இந்தியாவை ஆளப்போகும் மாண்புமிகு அம்மா அவர்களே! (மேசையைத் தட்டும் ஒலி) தங்களைப் பணிந்து வணங்குகிறேன்.

பிற்பகல் 12–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 30 முதல் 35 முடிய 6 அறிக்கைகளை மனுக்கள் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2013

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*